**தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 27 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் அவர்களிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலானகணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 358.30 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 343.86 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 14.44 மில்லியன் அல்லது 4.03 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 298.87 | 294.28 | 4.59 | 1.54 |
| மூலதனம் | 59.43 | 49.58 | 9.85 | 16.57 |
| மொத்தம் | **358.30** | **343.86** | **14.44** | **4.03** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்தஎல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 6.00 | 6.00 | 3.40 | 3.42 | 42.00 | 18.66 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் 04 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 155.60 மில்லியன் கூட்டுத்தொகையான மீதி காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0008/0013/000 | 76.67 |
| 6000/0000/00/0016/0120/000 | 6.20 |
| 6000/0000/00/0013/0131/000 | 71.83 |
| 6000/0000/00/0001/0125/000 | 0.90 |
| மொத்தம் | **155.60** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 7/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் எரிபொருள் நிதி ஏற்பாட்டிலிருந்து 15 சதவீதம் சேமிக்கப்பட வேண்டிய போதிலும், அச்செலவின விடயத்தில் 9.5 சதவீதம் மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

விபரமான பட்டோலைகள், மீதி உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வு மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் போன்ற தேவையான சான்றுகள் இன்மை காரணமாக ரூபா 1,072 மில்லியன் தொகையான 11 கணக்கு விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

6000/0000/00/0013/0131/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 71,830,173 மீதி காணப்பட்டது. அந்த மீதி 1989 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கிடைத்திருந்த தொகைகளை உள்ளடக்கியிருந்ததுடன், அதில் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முடிந்திருந்த வருமானங்களை ஆய்ந்தறிந்து நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

30001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 3.65 மில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட்டது. அந்த நிலுவையான மீதிகள் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலத்திற்கு உரியவையாக இருந்ததுடன், 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதியில் உள்ளவாறு அதில் ரூபா 1.12 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது.

### 3.6 கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான முற்பணக் கணக்கு

2003 திசெம்பர் 10 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2004 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய மேலதிக பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் பீடீ/ஏடீஎஸ்/சீஓஎம்/எவ்சீ/எவ்டீ ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உணவுத் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டிருந்த உணவுக் கொள்வனவு மற்றும் விநியோக முற்பணக் கணக்கை 2004 திசெம்பர் 31 திகதி மூடிவிடுவதற்கும் மூடுவதற்குரிய நடவடிக்கைகளிற்காக திணைக்களத்தின் அல்லது அமைச்சின் கீழ் மூடும் பிரிவொன்றை பேணுவதற்கும் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறான பிரிவொன்று பேணிவந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த முடும் நடவடிக்கைகள் உணவு ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும், 12 ஆண்டுகள் அதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், முடும் நடவடிக்கைகள் நிறைவு பெற்றிருக்கவில்லை.

அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூடும் பிரிவொன்று தாபிக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படாத போதிலும், 2005 சனவரி 01 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 45,351,746 கூட்டுத்தொகையான சொத்துச் சீராக்கல்களும் தேறுதல்களும், ரூபா 75,902 தொகையான பொறுப்புச் சீராக்கல்களும் தீர்த்தல்களும் உணவு ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) முற்பணக் கணக்கு 2005 சனவரி 01 ஆந் திகதி முதல் முடிவுறுத்தப்பட்டு வந்திருந்ததுடன், இதன் ஒட்டுமொத்த தொழிற்பாட்டு நட்டம் ரூபா 981,398,869 ஆக காணப்பட்டது. அத் தொகையினை பதிவழித்து கணக்கீடு செய்யும் வேலைகளிற்குத் தேவையான நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொள்வதற்காக 2010 நவம்பர் 04 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கமைய, 2012 முதல் 2016 ஆம்

ஆண்டு வரையிலும் அதில் ரூபா 342,396,972 பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், இன்னும் பதிவழிக்கப்பட வேண்டியுள்ள மீதி ரூபா 639,001,897 ஆன போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 598,640,879 என ரூபா 40,361,018 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) உணவுத் திணைக்களத்தினால் வெளிவாரி நிறுவனங்களிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 59 களஞ்சியங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 68,291,040 கூட்டுத்தொகையாக காணப்பட்டது. 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 44,577,761 ஆக காணப்பட்டது. அக் களஞ்சியங்களில் 22 களஞ்சியங்கள் மீளாய்வாண்டு இறுதி வரையில் மீளக் கையேற்கப்பட்டிருந்ததுடன், அவற்றிலிருந்து 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 32,005,603 கூட்டுத்தொகையான வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) ஐந்து நிறுவனங்களிற்கும் தனிநபர்களிற்கும் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கட்டிடங்களிற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை மின்சார மற்றும் தண்ணீர் கட்டணங்கள் ரூபா 1,394,807 கூட்டுத்தொகையாக காணப்பட்டது.

(உ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 309,680,825 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதியினை அறவிடுதல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

### 3.7 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, அடையப்பட்டிருந்த செயலாற்றல் தொடர்பாக கணக்காய்வில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 2013 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக உணவுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டுறுத் திட்டத்தின் படி திணைக்களத்தில் 50,000 மெ.தொ. பாதுகாப்பு அரிசி இருப்பை பேணுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கமைவாக மீளாய்வாண்டிற்குத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 2016 ஆம் ஆண்டில் 50,000 மெ.தொ. அரிசியினை பாதுகாப்பு இருப்பாக பேணுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி, 10,800 மெ.தொ. அரிசியினை களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் வெயங்கொடையிலுள்ள 9 மற்றும் 10 ஆம் இலக்க களஞ்சியங்களை விஞ்ஞான ரீதியான களஞ்சியங்களாக மாற்றுவதற்கு ரூபா 43,724,305 செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் உணவுத் திணக்களத்திற்குச் சொந்தமான எந்தவொரு களஞ்சியத்திலும் பாதுகாப்பு அரிசி இருப்பு காணப்படவில்லை. எவ்வாறாயினும், திணைக்களம் சமர்ப்பித்திருந்த செயற்திட்டம் அங்கீகரிக்கப்படாமையால் உத்தேச செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாது போனதாக உணவு ஆணையாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த போதிலும், உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான வேயங்கொட களஞ்சிய வளவிலுள்ள 05 களஞ்சியங்கள் விஞ்ஞான ரீதியான களஞ்சியங்களாக மேம்படுத்தப்பட்டிருந்தன. இதற்காக 2016 ஏப்ரல் 27 ஆந் திகதிய 16/0619/723/016 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் கீழ் ரூபா 214 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகையில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 38.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களில் பாதுகாப்பு அரிசி இருப்பு காணப்படாத போதிலும், நவீனமயப்படுத்தப்பட்ட வேயங்கொடையிலுள்ள 09 மற்றும் 10 ஆம் இலக்க களஞ்சியங்களில் வெப்ப நிலையினை உரிய அளவில் பேணுவதற்கான மின்சாரத்திற்காக 2016 சனவரி மாதம் முதல் 2017 மே மாதம் வரை ரூபா 387,100 செலவிடப்பட்டிருந்தது.

**3.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓருகொடவத்தையிலுள்ள 15 மற்றும் 16 ஆம் இலக்க களஞ்சியங்களை 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் குத்தகைக்கு எடுத்திருந்த தனியார் கம்பனியிடமிருந்து 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 14,834,093 திணைக்களத்திற்கு அறவிடுவதற்கிருந்தது. அக் கம்பனியினால் களஞ்சிய வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வீதிகள், அலுவலகங்கள் மற்றும் கொள்கல பரிசோதனைக் கூடங்களிற்கான பெறுமதி ரூபா 13,100,000 என அரசாங்க விலைமதிப்பீட்டாளரினால் பெறுமதியிடப்பட்டிருந்தது. அத்தொகை பிந்திய குத்தகையாளரான மற்றொரு தனியார் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும், முன்னைய கம்பனியுடனான கொடுக்கல் வாங்கல்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்ற 10 களஞ்சியங்கள் லங்கா சதொச நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 08 களஞ்சியங்களிற்காக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த 02 களஞ்சியங்களின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இக் களஞ்சியங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 19,432,103 பெறுமதியாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை வாடகையினை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. களஞ்சியங்களை வாடகைக்கு வழங்குகையில் ஆரம்ப வைப்புப்பணம் பெறப்பட்டிருக்காமை காரணமாக நிலுவையான வாடகையினை அந்த வைப்புப் பணத்திலிருந்தேனும் எதிரீடு செய்வதற்கு முடியாது போயிருந்தது.

(இ) திருகோணமலை, சீனக்குடாவில் அமைந்துள்ள தானியக்கிராம வீட்டுத் தொகுதியிலுள்ள 352 வீடுகள் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் 1982 மார்ச் 12 ஆந் திகதி உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வீட்டுத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலத்தின் உரித்து உணவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வீடுகள் பிரிமா கம்பனியின் ஊழியர்களிற்கும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அரசாங்க மற்றும் அரை அரசாங்க ஊழியர்களிற்கும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த அரசாங்க வீடுகளிலிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,787,742 வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை அதில் ரூபா 411,688 அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) வேயங்கொட விஞ்ஞானக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்துவதற்காக அரிசியினை பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டில் இரண்டு தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்த நெல்லிருந்து வழங்கப்படாத அரிசிக்காக இரண்டு அரிசி ஆலை உரிமையார்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,190,700 தொகையினை அறவிடுவதற்காக 2014 ஆம் ஆண்டில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அப்பணத்தினை திணைக்களத்திற்கு அறிவிடுவதற்கு முடியாது போயிருந்தது.

**3.9 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

2016 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் ஆண்டு முழுவதற்கும் ஒரேதடவையில் இறைவரியினை செலுத்துகையில் 10 சதவீத கழிவினை பெற்றுக்கொள்ள முடிந்திருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் இறைவரியுடன் தொடர்புடைய ரூபா 1,275,397 காசோலை கொழும்பு மாநகர சபைக்கு

உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக ரூபா 88,569 கழிவு நலனை பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது.

### 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 05 | 03 | 02 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 116 | 47 | 69 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 03 | 01 | 02 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 106 | 59 | 54 | 07 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 230 | 112 | 127 | 09 |